பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 30 வெள்ளிக்கிழமை 15.08.2025 | அதிர்வு 015

## லொஹான் ரத்வத்த இன்று காலமானார்



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் சுதர்சன் காலமானார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரான வைத்தியர் வெங்கடாசலம் சுதர்சன் மாரடைப்பு காரணமாக இன்று வெள்ளிக் கிழமை கொழும்பில் காலமானார்.

வைத்தியர் சுதர்சனின் இழப்பானது யாழ். போதனா வைத்தியசாலைக்கும், இலங்கை மருத்துவத்துறைக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என்று சக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர் சுதர்சனின் மறைவு தொடர்பில் யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

“யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நீண்ட காலமாகச் சேவையாற்றிய, உயர் திறமையுடன் 02

### அடுத்த வருட முற்பகுதியில்

# மாகாண சபைத் தேர்தலை அநுர அரசு நடத்த வேண்டும்



### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

“ஆளுநர்கள் ஊடாக மாகாண சபைகளை ஆள்வது தவறாகும். எனவே, அடுத்த வருட முற்பகுதியில் அநுர அரசு தேர்தலை நடத்த வேண்டும்.”

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு 5 வரு 02

# விமலை இன்று 3 மணிநேரம் துருவிய சி.ஐ.டி.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை முன்னிலைனார்.

அவர் அங்கு 3 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார். அதன் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார்.







# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக தெய்வீக இசை அரங்கம்!

சந்நிதியான் ஆச்சிரமத்தில் சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், வாராந்த நிழ்வில் இன்று (15) ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இசை ஆசிரியர், இசைக்கலைமணி திருமதி பங்கயச்செல்வி முகுந்தனின் பாடல்கள் இடம்பெற்றன.

ஹார்மோனியம் – இசைக்கலாமணி நடேசு செல்வச் சந்திரன், மிருதங்கம் – முதுகலைமாணி ஞானவேல் வசந், தபேலா – கலாவித்தகர் வே.பிரபாகரசர்மா ஆகிய அணிசெய் கலைஞர்களாக இருந்தனர்.

சங்கானை பிரதேச வைத்தியசாலை நலன்புரி சங்க சமூகத்தின் ஒழுங்குபடுத்தலில் வைத்தியசாலை பணிப் பாளரால் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் அறப் பணிகளுக்காகக் கௌரவிக்கப்பட் டார்.



## பிரபல சத்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய சத்திர சிகிச்சை நிபுணர் வைத் தியர் சுதர்சன், இன்று திடீரென உயிரிழந் தார் என்ற செய்தி, மருத்துவ உலகத் தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மருத்துவம் என்பது ஒரு சேவையாக வும், ஓர் ஒப்பற்ற தர்மமாகவும் இருந்த காலத்தில், மனிதாபிமானமும், உயிருக் காகப் போராடும் உறுதியும் கூடிய மருத் துவராக வைத்தியர் சுதர்சன் விளங்கினார்.

அவசர சத்திர சிகிச்சைகள், அரிய வகை அறுவை சிகிச்சைகள், மற்றும் மருத்துவக் கல்வி பயிற்சிகளில் அவர் செய்த பங்களிப்பு, யாழ். மருத்துவக் குடும்பத்தில் நீண்ட நாள் நினைவு கூரப்படும்.

அவரது பணிவும், நோயாளிகளுடன் கொண்ட நெருக்கமான உறவும், அவரை நோக்கி வரும் எதுவும் ஒரு "மருத்துவரின் மேன்மை" என்பதற்கான சான்றாக இருந் தது. மருத்துவ மாணவர்களிடையே அவர் முன்மாதிரியாகவும், வழிகாட்டி யாகவும் திகழ்ந்தார்.

மரண வாசல் அருகிலும் உயிரைக் காக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தொடர்ந்து பலரை மீட்டவர். அவரின் திடீர் மறைவு, யாழ். போதனா வைத்திய சாலைக்கும், இலங்கை மருத்துவத்துறைக் கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் இருக்கின்றது.

அவரது குடும்பத்தாருக்கும், சக ஊழியர்களுக்கும், நோயாளிகளுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும், உணர்வுபூர் வமான அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஒரு நல்ல மருத்துவர் ஆயுள் நீட்டிக் கின்றார் ஆனால், ஒரு சிறந்த மருத்துவர் நம்பிக்கையை உயிராக்குகிறார். வைத் தியர் சுதர்சன் அந்தச் சிறந்தவர்களில் ஒருவராகவே இருந்தார். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்." – என்றுள்ளது.

வைத்தியர் சுதர்சனின் இறுதிக்கிரி யைகள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## லொஹான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான லொஹான் ரத்வத்த காலமானார்.

உடல் நலக் குறைவால் கொழும்பில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் இன்று காலமானார்.

உயிரிழக்கும் போது அவருக்கு வயது 57 என்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் போதாது, 15 வருடங்கள் தேவை என்று சீனத் தலைவர்கள் கூறினார்கள் என ஜே.வி.பின் செயலாளர் நாயகம் கூறியுள்ளார். 15 வருடங்கள் ஆள வேண்டுமெனில் அதற்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் மக்கள் எந்த நிலைப்பாட்டில் உள்ளனர் என்பது இந்த அரசுக்குத் தெரியவரும். எனவே, அடுத்த வருட முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அநுர அரசுக்குச் சவால் விடுக்கின்றோம்.

மாகாண சபை முறைமை என்பது அரசமைப்பின் ஓர் அங்கமாகும். எனவே, அந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே வடக்கு மற்றும் தெற்கு மக்களின் கோரிக்கையாக உள்ளது." – என்றார்.



# யாழில் இந்தியச் சுதந்திர தினக் கொண்டாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினமான இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்தியத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, சுதந் திர தின நிகழ்வுகள் கொண்டாடப் பட்டன.

யாழ். மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் காலை 9 மணியளவில் இந்தியாவின் தேசியக் கொடியைத் துணைத் தூதுவர் சாய் முரளி ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து, சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியக் குடிய ரசுத் தலைவரின் வாழ்த்துச் செய்தியை சாய் முரளி வாசித்தார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், உத்தியோகத்தர் கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட னர்.
















# அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் பெருவிழா



யாழ். அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் விசுவாவசு வருஷ 4 ஆம் ஆடிச் செவ்வாய் உற்சவமும் திருமஞ்ச பெருவிழாவும் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைச்சரின் நடிப்பு

தூங்குபவனை தூக்கத்திலிருந்து எழுப்பலாம். ஆனால், தூங்குபவன் போல நடிப்பவனை எழுப்ப முடியாது.

ஈழத் தமிழர் விடயத்தில் தென்னிலங்கைத் தலைவர்கள் பலர் தூங்குபவர்கள் போல பாசாங்கு செய்கிறார்கள். அவர்களை அந்தத் தூக்கத்திலிருந்து எழுப்ப முடியாது.

வடக்கு - கிழக்கில் தமிழரசுக் கட்சி வரும் திங்கட்கிழமை நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ள ஹர்த்தால் தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த கருத்து அவர் இவ்விகாரத்தில் தூங்குபவர் போல நடிக்கிறாரோ என்ற கருத்தைத் தந்து நிற்கிறது.

வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப் படவுள்ள இந்தக் கடையடைப்பு போராட்டம் தேவையற்ற ஒன்று என அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

“கடையடைப்புப்போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், அதை நடத்த எந்தக் காரணமும் இல்லை. அண்மையில் முல்லைத்தீவு பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், நீதிமன்ற உத்தரவுகளின்படி அடுத்த நடவடிக்கைளை நாங்கள் எடுப்போம். இந்நிலையில், கடையடைப்பு போராட்டம் நடத்துவது பயனற்ற செயல்.” - என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

“இந்த சம்பவங்களை நாம் இனம் அல்லது மதத்தின் பார்வையில் பார்க்கக்கூடாது. ஒரு குற்றம் நடக்கும்போது, பொறுப்பான எவருக்கும் எதிராக, அவர்களின் பின்னணியைப் பொருள்படுத்தாமல் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக இதை நாங்கள் நடைமுறையில் நிரூபித்துள்ளோம்.” என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அழைப்பு விடுக்கப்பட்ட இந்தக் கடையடைப்புப் போராட்டத்தில் உண்மையான நோக்கம் தெரியாதவர் போல அல்லது புரியாதவர் போல கருத்து வெளியிட்டிருக்கிறார் அமைச்சர் விஜயபால.

இது முத்தையன்கட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்திற்கான கடையடைப்பு அல்ல. அதையும் தாண்டி, இதில் நோக்கம் உள்ளது. அந்த இளைஞரின் உயிரிழப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது தமிழர் தாயகத்தில் - மக்கள் வாழிடப் பிரதேசங்களில் - அளவுக்கு மீறிய, அத்துமீறிய இராணுவப் பிரசன்னம் இருப்பதுதான். அதுவே இத்தகைய மோசமான நிலைமைக்கு - சம்பவங்கள் நிகழுகின்றமைக்கு - பிரதான காரணம். அத்தகைய அதீத இராணுவப் பிரசன்னத்துக்கு - படை குவிப்புக்கு - ஆக்கிரமிப்புக்கு - எதிரான கடையடைப்பே தவிர, இது தனித்து ஓர் இளைஞரின் படுகொலைக்கு எதிரான நடவடிக்கை அல்ல.

முத்தையன்கட்டுச் சம்பவங்கள் போன்ற விடயங்கள் மற்றைய மாகாணங்களிலும் நடக்கின்றன என்றும், ஆனால் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் இவ்வாறு கடையடைப்பு போராட்டங்களை நடத்துவதில்லை என்றும் கூட அமைச்சர் விஜயபால சுட்டிக்காட்டி இருக்கிறார்.

நல்லது ஐயா, அந்த மற்ற மாகாணங்களில் இவ்வளவு தூரத்திற்குப் படைக் குவிப்பு இடம்பெறவில்லை என்பதை மறந்து விடாதீர்கள். இலங்கைப் படைகளில் மூன்றிலிரண்டு பகுதியினர் வடக்கு, கிழக்கில் மட்டும்தான் குவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அதற்கு எதிரான போராட்டம் இது என்பதைத் தெரியாதவர் போல - புரியாதவர் மாதிரி - அமைச்சர் நடிக்கிறார் என்றே தோன்றுகின்றது.

# பாவனையற்ற கிணற்றில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு!

மீசாலைப் பகுதி பாவனையற்ற கிணற்றில் மிதந்த நிலையில் காணப்பட்ட ஆணின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று (14) கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசியதை அவதானித்த அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் பொலிஸாரால் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இவரது மனைவி, பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் என்றும் இவர் தனித்து வாழ்ந்து வந்துள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருகிறது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த கோவிந்தபிள்ளை வேலுப்பிள்ளை (வயது 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கோவில் வைத்து பராமரிப்பவர் எனவும் கோவில் கிணற்றில் சடலம் காணப்பட்டார் என்றும் தெரிவிப்பட்டது.






# ‘இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு’ விசேட நடமாடும் சேவை ஆரம்பம்!

‘கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், வடமாகாண சபை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய ‘இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு’ என்றும் விசேட நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (14) பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கடற்தொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரரும் சிறப்பு விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், கௌரவ விருந்தினர்களாக ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் ந. சஞ்சீவன், ‘கிளீன் ஸ்ரீலங்கா’ பணிப்பாளர்களான தசூன் உதார, துலீப் சேமரத்தன ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கடற்தொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரர் உரையில்,

அரச கொள்கை பிரகடனத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’, வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகிய மூன்று திட்டங்கள் முக்கியமாக காணப்படுகின்றன. அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக ரீதியான பிரச்சினைகள் கலாசார ரீதியான பிரச்சினைகள் உள்ளன. அவ்வாறான பிரச்சினைகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

போதைப் பொருள் பாவனையும் அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறான மனநிலையில் இருப்பவர்களை அவர்களின் மனங்களை மாற்றி நல்ல சமூகத்தை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டே ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.– என்றார்.

இந் நிகழ்வுக்கு முன்னராக தலைமையுரை ஆற்றிய அரச அதிபர், இன்றைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வருகை தந்த அமைச்சர், ஆளுநர், ஜனாதிபதி செயலக அதிகாரிகள் உள்ளிட்டவர்களை வரவேற்றனர். இன்று முதல் ஒரு வாரம்வரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.– என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகண சபைச் செயலாளர்கள், அதிகாரிகள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வந்த பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.












# பருத்தித்துறை விசேட நடமாடும் சேவையில் அதிக எண்ணிக்கையான மக்கள் பங்கேற்பு!

பருத்தித்துறையில் நடைபெற்ற விசேட நடமாடும் சேவையில் எதிர்பார்த்த பொது மக்களை விட அதிக எண்ணிக் கையான பொது மக்கள் ஆர்வத்தோடு பங்கேற்றுள்ளனர் என்று நிகழ்வுக்கு ஏற்பாடு செய்த யாழ்.மாவட்டச் செயல கத்தினர் அறிவித்துள்ளனர்.

'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் கீழ் நேற்று (14) பருத்தித்துறை வேலா யுதம் மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற விசேட நடமாடும் சேவையில் அண்ணளவாக 500 பொதுமக்கள் வருகை தந்து தமக்குரிய சேவையைப் பெற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்த்த நிலையில் 1657 பொது மக்கள் வருகை தந்து, 2057 சேவை களைப் பெற்றுக் கொண்டுள்ள னர்.

இந்த விசேட நடமாடும் சேவையில் கண் பரிசோதனையை 648 பேரும், ஆட்பதிவுச் சேவையை 446 பேரும், மருத்துவ பரிசோதனைச் சேவையை 205 பேரும், பிறப்பு இறப்புப் பதிவுச் சேவையை 162 பேரும், மோட்டார் வாகன போக்குவரத்துச் சேவையை 145 பேரும், மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சேவையை 59 பேரும், ஓய்வூதிய சேவையை 46 பேரும் உள்ளடங்களாக 1657 பொது மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றித் தமக்கு உரிய சேவை களைப் பெற்றுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டுவில், சந்திரபுரம் கிராமத்தில் ஆயுள்வேத மருத்துவ முகாம்!

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில், சந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் ஆயுள்வேத மருத்துவ முகாம் கைதடி சித்த வைத்தியசாலை அனுசர ணையுடன் இடம்பெற்றது.

மருத்துவ முகாமில் கைதடி சித்த வைத்தியசாலை ஆயுள்வேத வைத்தியர் மற்றும் சமூக மருத்துவ உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.










# மாந்தை மேற்கில் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் நிகழ்வு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மாந்தை மேற்கில் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் திட்டத்தின் கீழ் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊடாக மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்ட நிகழ்வாக நேற்று வியாழக்கிழமை (14) மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தாமரைக் குளத்தில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வு விழுது நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட அலுவலர் டலிமா தலைமையில் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தின் ஊடாகப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், கிராம அபிவிருத்தி முன்னெடுத்தல் உள்ளிட்ட நிகழ்வாக இது இடம் பெற்றது.

நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், உள்ளடங்களாக அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# சமயத் தலைவர்களின் மொழிப் புலமையை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

சமயத் தலைவர்களின் மொழி புலமையை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்ட ஆரம்பக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (14) அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசகரும மொழிகள் திணைக் களத்தின் ஆணையாளர் நாயகம் நந்தன கெட்டியாராய்ச்சி, ஆணையாளர் எம்.எஸ்.ஜெயவீர மற்றும் கண்காணிப்பாளர் லசித் நலந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சமய தலைவர்களின் (இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம்) சிங்கள மொழிப் புலமையை விருத்தி செய்து அதன் ஊடாக நல்லிணக்கத்தை விருத்தி செய்வதை நோக்கமாகக்



கொண்டு இந்த நிகழ்வு நடைபெற்றது.

கலந்துரையாடலில் வளவாளர்களாக ஸ்ரீ ரஞ்சன்,சுனில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி மாதவி குணரட்ண மற்றும் அரச கருமமொழியின் உத்தியோகத்தர்கள், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர், சமயத் தலைவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரச நிறுவனங்களில் 62 ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்ப அநுர அனுமதி பெற்றமை வரவேற்கத்தக்கது!

## தோட்டப்புறங்களுக்குச் சாத்தியமாகுமா என்கிறார் நுவரெலியா பிரதேச சபை உப தலைவர் சச்சிதானந்தம்

(மஸ்கெலியா நிருபர், பொகவந்தலாவ நிருபர்)

அரச நிறுவனங்களில் சுமார் 62 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நியமன அனுமதியை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா பெற்றிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும் என்று இ.தொ. காங்கிரஸ்சின் உப தலைவரும் முன்னாள் நுவரெலியா பிரதேச சபை உப தலைவர் எஸ். சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார். இவர் மேலும் தெரிவித்ததாவது,

நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தோட்டப் புறங்களில் கல்வியை முடித்துத் தொழிலுக்காகக் காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு இது எந்த அளவுக்குச் சாத்தியமாக அமையும் என்பதைப் பொருத்திருந்து பார்க்கவேண்டும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமரர் ஆறுமுகம் தொண்டமான் காலப்பகுதியில் ஆசிரியர் நியமனங்கள் அரச ஊழியர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான நியமனங்கள் மத்திய மாகாண அமைச்சுப் பொறுப்புகளை வகித்த முன்னாள் மாகாண கல்வி அமைச்சராக இருந்த மருதுபாண்டி ராமேஸ்வரன் காலப்பகுதியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் இறுதியாக அவர் தனது நாடாளுமன்ற காலப்பகுதியில் மலையகத்துக்கான 740 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் என்பன இடம்பெற்றன.

நுவரெலியா மாவட்டத்தில் அமைச்சராக இருந்த எவரும் இதுபோன்ற



தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

தற்போதைய ஜனாதிபதி முதல் தடவையாக 62 ஆயிரம் நபர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்க முன்வந்தமை வரவேற்கவேண்டிய விடயமாகும்.

இன்றைய அரசு எல்லா வழிகளிலும் பாகுபாடற்ற நல்ல நிர்வாகத்தை நடத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக கூறி வருகின்ற நிலையில் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பைச் சிறுபான்மை சமூகத்தினருக்குச் சரியான முறையில் தகுதி அடிப்படையில் வழங்க வேண்டும்.

அதிகமான அரச ஊழியர்கள் ஓய்வு பெறுகின்ற இந்த நிலையில் கிடைத்திருக்கும் தொழில் நியமன வாய்ப்புகள் பட்டதாரிகள் மற்றும் தொழில் இல்லாத நிலையில் குடும்ப பொருளாதார பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வழங்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது சம்பந்தமாக வலியுறுத்தி அழுத்தம் கொடுக்குமாறு மிக வினையமாக கேட்டுக்கொள்கின்றேன்

இந்த சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிட்டால் 55 வருட காலத்துக்குள் 62,000 நியமன வாய்ப்பில் விகிதாசார அடிப்படையில் பார்த்தாலும் கூட சிறுபான்மை இனத்துக்கு சுமார் 23 ஆயிரம் நியமன வாய்ப்புகள் இல்லாது போய்விடும்.

எனவே, இதனைக் கவனத்தில் கொண்டு இன்றைய அரசில் மக்களுக்கு சேவை செய்ய அங்கீகாரம் பெற்ற மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை வலியுறுத்த வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உழைத்தவர்கள் பெருந்தோட்ட மக்கள் இவர்களின் பிள்ளைகளுக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பது ஒவ்வொரு அரசினதும் கடமையாகும்.

அந்த வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த மக்களின் உரிமைக்காகவும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தையும் இருப்பிடத்தையும் உறுதி செய்வதற்காகப் பல போராட்டங்களை செய்த ஒரு அமைப்பாகும்.

எப்போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் அதிக அக்கறை கொண்டு செயற்படுவதில் எப்போதும் பின்வாங்கியது இல்லை.

எனவே ஜனாதிபதி 62,000 இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளமை பாராட்ட வேண்டிய விடயமாகும்.– என்றார்.





# சிவகரனுக்கு பிரிவுபசார விழாவும் பாராட்டும்!

வேலணை பிரதேச செயலகத்தில் 2021 – 2025 வரை பிரதேச செயலாளராக கடமையாற்றி யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்று சென்ற கயிலாய பிள்ளை சிவகரனுக்கு, உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தினால் நேற்று முன்தினம் (13.08) பிரிவுபசார விழாவும் பாராட்டும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது.







# 50 வருடங்களுக்குப் பின்னர் தற்போது தூர்வாரப்படுகிறது உப்புக்கேணிக் குளம்!

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட உப்புக்கேணிக் குளம் சுமார் 50 வருட காலத்துக்குப் பின்னர் சாவகச்சேரி நகர சபையினரின் முயற்சியால் தூர்வாரப்பட்டு அதிக நீரைக் கொள்ளக் கூடிய விதமாக அமைக்கப்படுகின்றது.

சாவகச்சேரியின் பல்வேறு கிராமங்களில் இருந்தும் மாரி காலத்தில் வெள்ள நீர் உப்புக்கேணிக் குளத்தை வந்தடைந்து மேலதிக நீர் வடிகால் ஊடாக கச்சாய் கடலை சென்றடைவது வழமை.

ஆனால் சில வருடங்களுக்கு முன் அதிகளவில் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டடங்கள் உள்ளிட்ட முறையற்ற அபிவிருத்திகளால் உப்புக்கேணிக் குளத்தின் மேலதிக நீர் கடலைச் சென்றடையும் வடிகால் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயுள்ளது.

குளம் நீண்ட காலமாக எந்தவித புனரமைப்பும் இன்றிக் காணப்படுவதனாலும் வடிகால்கள் மூடப்பட்டதனாலும் ஒவ்வொரு மாரி காலத்திலும் அந்தப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ள இடரைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உள்ளது.

குறிப்பாக கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் உப்புக்கேணிக் குளத்தைச் சூழவுள்ள மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

மக்கள் இணைந்து தொடர்ச்சியாக இரவு, பகலாக மூன்று நாள்கள் நீர்ப்பம்பி ஊடாகக் குளத்து நீரை கடலுக்குள் இறைத்து வெள்ள இடரை சமாளித்திருந்தனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதி மக்கள் மேற்படி விடயத்தை அரச அதிபர், பிரதேச செயலர், நகரசபை செயலாளர் உள்ளிட்டோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர்.

குறிப்பாக குளத்தை ஆழப்படுத்தி அதிக நீரை கொள்ளச் செய்வதுடன் மேலதிக நீர் கடலைச் சென்றடைய ஏதுவாக வடிகால் அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதன் பின்னர் குளத்துக்கான வடிகால் அமைப்பதற்காக சாவகச்சேரி நகரசபையால் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் 7 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர் அண்மையில் ஆட்சியமைத்த புதிய சபையினர் முதற்கட்டமாக மாரிமழைக்கு முன்னர் குளத்தைத் தூர்வாரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனூடாக குளத்தினுள் அதிகளவு நீரை உள்ளடக்கி வெள்ள அனர்த்தத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

சுமார் 50 வருட காலத்துக்குப் பின்னர் இந்தக் குளம் தூர்வாரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சுவிஸில் நடைபெற்ற தாச்சியில் குமரநகர் சிவப்பு அணி வெற்றி!

(த.சுபேசன்)

சுவிட்சர்லாந்தில் அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய ரீதியிலான தாச்சி விளையாட்டுப் போட்டியில் கைதடி குமரநகர் சிவப்பு மற்றும் குமரநகர் மஞ்சள் விளையாட்டு அணியினர் இரண்டு தனி அணிகளாக களமிறங்கிய நிலையில் குமரநகர் சிவப்பு அணி வெற்றி வாகை சூடியுள்ளது.

இதில், குமரநகர் சிவப்பு அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்று "சூழல் கிண்ணத்தை" தம்வசப்படுத்தியது. குமரநகர் மஞ்சள் அணி சிறப்பாக விளையாடி மூன்றாம் இடத்தை பிடித்திருந்தது.



### பீடி இலைகள், வெளிநாட்டு சிகரெட், போதை மாத்திரைகள், ஊசிகள்

# கற்பிட்டி திகழி பகுதியில் ஒருவர் கைது!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

இலங்கை கடற்படையினர் கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து திங்கட் கிழமை (11) இரவு கற்பிட்டி திகழி பகுதியில் நடத்திய சிறப்பு கூட்டு தேடுதல் நடவடிக்கையின் விளைவாக, 379 கிலோ பீடி இலைகள், 6000 வெளிநாட்டு சிகரெட்டுகள், 2 லட்சத்து 81 ஆயிரத்து இருநூறு மருந்து மாத்திரைகள் மற்றும் ஆயிரத்து 291 மருந்து ஊசிகளுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி திகழி பகுதியில், கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை நடத்திய இந்தச் சிறப்புக் கூட்டுத் தேடுதல் நடவடிக்கையின் போது, அந்தப் பகுதியில் உள்ள ஒரு சந்தேகத்துக்கு இடமான வீட்டைச் சோதனையிட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது, வீட்டில் இருந்து 379 கிலோ பீடி இலைகள், 6000 வெளிநாட்டு சிகரெட்டுகள், 2 லட்சத்து 81 ஆயிரத்து 200 போதை மாத்திரைகள் மற்றும் ஆயிரத்து 291 மருந்து ஊசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டியின் எத்தாளை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என அடையாளம் காணப் ணபட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், வெளிநாட்டு சிகரெட்டுகள், போதை மாத்திரைகள் மற்றும் மருந்து ஊசிகளை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கற்பிட்டி சேராக்குளி களப்பு பகுதியில் பீடி இலைகள்,வெளிநாட்டு சிகரெட்கள்!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

இலங்கை கடற்படையினர் கற்பிட்டி சேராக்குளி களப்பு பகுதியில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 1180 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் 20 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்களுடன் இருவரையும் இரண்டு டிங்கி படகுகளையும் செவ்வாய்க்கிழமை (12) கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கடல் வழிகள் ஊடாக கடத்தில் உட்பட சட்ட விரோத நடவடிக்கைளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படையினர் வழக்கமாக ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி வடமேற்கு கடற்படை கட்டளையின் கீழ் உள்ள இலங்கை கடற்படை கப்பல் விஜய நிறுவனம் கற்பிட்டி சேராக்குளி களப்பு பகுதியில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி சட்ட விரோத பொருள்கள் சந்தேக நபர்களுடன் டிங்கி படகுகள் கைப்பற்றப்பட்டன என்றும் சந்தேக நபர்கள் 23 மற்றும் 45 வயதுடைய கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக சட்ட வழக்கறிஞர்களுக்காகக் கைப்பற்றப்பட்ட பொருள்கள் சந்தேக நபர்களுடன் புத்தளம் மதுவரி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக 2025 பண்பாட்டு விழா இன்று!

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டு விழா இன்று (15) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் விழா நடத்தப்பட்டது.

பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட கலாசார அலுவலர் திருமதி சி.மாலினி, லண்டன் தொழிலதிபர் ந. காந்தரூபன் ஆகியோரும் அதிதி கலை விருந்தினராக கலாபூசணம் செ. தனபாலசிங்கமும் கலந்து கொண்டனர் .

பிரதேச கலைஞர்கள் மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.


பிரதேச கலைஞர்கள் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

பிரதேச செயலகத்தின் இவ்வருட கலைத் தென்றல் விருது க. தெட்சிணாமூர்த்தி (இசை,நாடகம் – முல்லையடி), வா. உதயகுமார் (கூத்து –அல்லிப்பளை), வ. ஞானச்செல்வம் (கூத்து – சோரன்பற்று) ஆகியோருக்கும் இளங்கலைஞர் விருது திருமதி சரணிதரன் சரண்யாவுக்கும் (நடனம் – இயக்கச்சி) வழங்கப்பட்டன.

(மேலும் படங்கள் 15 ஆம் பக்கத்தில்)









# உடுவில் பிரதேச செயலகத்தில் இன்று விசேட நடமாடும் சேவைகள் ஆரம்பம்!

'கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், வடமாகாண சபை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் உடுவில், தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் 'இதய பூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு' என்னும் விசேட நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இன்று (15) உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கடற்தொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் ந. சஞ்சீவன், 'கிளீன் ஸ்ரீலங்கா' பணிப்பாளர் துலீப் சேமரத்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகண சபை செயலாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், 'கிளீன் ஸ்ரீலங்கா' குழுவினர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வந்த பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வின் இறுதியில் விசேட நிகழ்வாக புதுமணத் தம்பதியினருக்கு பிறப்புச் சான்றிதழ் முதல் தடவையாக வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பதிவுத் திருமணம் நடைபெற்றது. திருமணப் பதிவுச் சான்றிதழ் உத்தியோக பூர்வமாக அமைச்சரினால் தம்பதியினருக்கு வழங்கப்பட்டது.

புதிதாக பதியப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்குத் தொலைக்காட்சி பெட்டியும் வழங்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிள் ரயர்களும் பொது மக்களுக்கான தென்னங் கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டன. கண் பரிசோதனையின் பின் இலவச மூக்கு கண்ணாடியும் வழங்கப்பட்டது.

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)


















# இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தில் புதிய பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்த மோடி!

இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினமான இன்று (15) பிரதமர் நரேந்திர மோடி சுதர்சன சக்ரா மிஷன் (Sudarshan Chakra Mission) எனும் புதிய தேசிய பாதுகாப்பு திட்டத்தை அறிவித்துள்ளார்.

எதிரிகளின் தாக்குதல் முயற்சிகளை தடுக்க ஒரு சக்திவாய்ந்த ஆயுத அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்படுகிறது.

இந்தத் திட்டம், ராஷ்ட்ரிய பாதுகாப்பு கவசம் (Rashtriya Suraksha Kavach) எனப்படும் ஒரு தேசிய பாதுகாப்பு கவசத்தை உருவாக்கும்.

இது பல அடுக்குகளைக் கொண்ட பாதுகாப்பு அமைப்பாக இருக்கும். இதில் நவீன கண்காணிப்பு, உலடிநச பாதுகாப்பு மற்றும் உடல் பாதுகாப்பு ஆகியவை அடங்கும்.

இத்திட்டத்தின் முழுமையான விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டுள் என. ஆனால், இந்தியாவின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்கள், பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் தனியார் தொழில் நுட்ப நிறுவனங்களின் கூட்டு செயல் பாடாக இருக்கும் என கூறப்படுகிறது.

இந்த முயற்சி இந்தியாவை வெளி நாட்டு பாதுகாப்பு அமைப்புகளின் மீது சார்ந்திருப்பதை குறைத்து உள்நாட்டு தொழில்நுட்பங்களை மேம்படுத்தும். மேலும், பாதுகாப்பு மற்றும் அடிப்படை கட்டமைப்புகளில் சுயநிறைவுடன் வலுப் படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, இந்து மத கடவுளான கிருஷ்ண ரின் சுதர்சன சக்கரத்தை அடிப்படியாகக் கொண்டு உருவாக்கப்படும் நவீன பாது காப்புக் கவசமாகும் என்றும் இந்த மிஷன் இந்தியாவின் பாதுகாப்புத் துறையில் ஒரு முக்கியமான திருப்பு முனையாக இருக்கும்.





# காஷ்மீரில் திடீர் மழையின் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் திடீரென ஏற்பட்ட மழை காரணமாக உயிரிழந்தோரது எண்ணிக்கை அதி கரித்துள்ளது. 46 பேர்வரை உயிரி ழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளி யாகியுள்ளன.

ஜம்மு காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட் டத்தில் ஏற்பட்ட திடீர் மழை காரணமாகக் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள சஷோதி கிராமம் மச்சைல் மாதா புனித யாத்திரை செல்வதற்கான ஆரம்ப இடமாகும்.

இந்த வெள்ளப் பெருக்கால் உயிரிழந் தோரின் 46 உடல்களை மீட்பு பணியாளர்களால் மீட்கப்பட்ட நிலையில், உயிரிழப்புகளின் எண் ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்று அஞ்சப்படுகிறது.

இடிபாடுகள் மற்றும் சேறுகளில் இருந்து 167 பேரை பத்திரமாக மீட்டுள்ளனர். இவர்களில் 38 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.






# பிரிட்டன் விமான நிலையத்தில் விமான இறக்கைகள் உடைவு!

## சேவைகளும் நிறுத்தப்பட்டன

பிரிட்டன் மான்செஸ்டர் விமான நிலையத்தில் இரண்டு விமானங்கள் இறக்கைகளை வெட்டிக் கொண்டதால் குழப்பம் ஏற்பட்டது.

பிரிட்டன் மான்செஸ்டர் விமான நிலையம் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றாகும். இங்கு காலை 6.30 மணியளவில் ஏற்பட்ட நிகழ்வு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

நுயளலதநவ விமானங்கள் ஓடு பாதையில் டாக்ஸியிங் செய்யும்போது மோதிக் கொண்டன. இதில் விமானங்களின் இறக்கையின் பகுதி உடைந்து விழுந்தது. இதன் காரணமாக புறப்பட தயாராக இருந்த விமானங்கள் நிறுத்தப்பட்டன. பயணங்கள் தாமதமாகலாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

டெய்லி மெயிலின்படி, நுயளலதநவ விமானங்களில் ஒன்று ஜிப்ரால்டருக்கு புறப்பட தயாராக இருந்ததாகவும், மற்றொன்று பாரிஸ்ீக்கு புறப்பட தயாராக இருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், விமானங்கள் எவ்வாறு மோதிக்கொண்டது ஏன் என்றும் முதலில் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாக இருந்தன என்பது குறித்தும் விசாரணை இடம்பெறுகிறது.

# குற்றமற்ற புலம்பெயர்ந்தோரையும் கைது செய்கின்றது ட்ரம்ப் நிர்வாகம்!

ட்ரம்ப் நிர்வாகம் குற்றப்பின்னணி கொண்ட புலம்பெயர்ந்தோரை கைது செய்துவரும் நிலையில், அமெரிக்காவில் குற்றப்பின்னணி இல்லாத புலம்பெயர்ந்தோரையும் கைது செய்துவருகிறது என்று தகவல் வெளியாகியுள்ளது.

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி குற்றப்பின்னணி கொண்ட புலம்பெயர்ந்தோரை ட்ரம்ப் நிர்வாகம் கைது செய்துவருவது பலரும் அறிந்ததே.

இந்நிலையில், அமெரிக்காவில் குற்றப்பின்னணி இல்லாத, ஆனால், வெளிநாடுகளில் குற்றம் செய்ததாக கூறப்படும் புலம்பெயர்ந்தோரையும் அதிகாரிகள் கைது செய்துவருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவ்வகையில், புலம்பெயர்தல் மற்றும் சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளவர்களில் சுமார் 37 சதவிகிதம் புலம்பெயர்ந்தோர், அமெரிக்காவின் எந்த குற்றச்செயலிலும் ஈடுபடாதவர்கள் ஆவர்.




ட்ரம்ப் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஆறு மாதங்களில் அமெரிக்காவில் குற்றப்பின்னணி உள்ளவர்களும், குற்றப்பின்னணி இல்லாதவர்களுமான புலம்பெயர்ந்தோரும் 92,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில் கைது எண்ணிக்கை அதிகமாக இருந்த நிலையில், மே மாதம் வாக்கில் கைது எண்ணிக்கை குறைந்ததாகவும், அதைத் தொடர்ந்து, உள்நாட்டு பாதுகாப்புச் செயலரான கிறிஸ்டி நோயம் மற்றும் வெள்ளை மாளிகையின் பிரதிப் பிரதம அலுவலராகப் பதவி வகிக்கும் ஸ்டீபன் மில்லர், நாளொன்றுக்கு 3,000 பேரையாவது கைது செய்யவேண்டும் என்று புலம்பெயர்தல் மற்றும் சுங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் அதைத் தொடர்ந்து கைது எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 15/08/2025

## டொராண்டோவில் கத்தி குத்து தாக்குதல்



C03



# கனடாவில் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கான விதிமுறைகளில் மாற்றம்

**நிரந்தர வதிவிடத்திற்கு (PR) விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கான விதிகளில் முக்கிய மாற்றத்தை கனடா அறிவித்துள்ளது.**

**ஆகஸ்ட் 21 முதல் கனடா Express Entry வழியாக நிரந்தர வதிவிட உரிமத்தை (Permanent Residency) பெற விரும்பும் வெளிநாட்டவர்கள், தங்கள் Express Entry Profile-ஐ சமர்பித்தவுடன், Immigration Medical Exam (IME) முடித்திருப்பதற்கான சான்றுகளை முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.**

இதற்கு முன் IRCC (Immigran, Refugees and Citizenship Canada) வழிகாட்டுதல் வரும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

PR விண்ணப்பத்திற்கு Invitations to Apply (ITA) வந்தவுடன், விண்ணப்பதாரரும், தேவைப்பட்டால் அவரது குடும்ப உறுப்பினர்களும் மருத்துவ பரிசோதனை முடித்திருப்பதை நிரூபிக்கவேண்டும்.

இந்த பரிசோதனைகள் IRCC-யால் அங்கீகரிக்கப்பட்ட Panel Physicians மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், மருத்துவ பரிசோதனைக் காண அனைத்து செலவுகளும் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

Spouse, Partner, Child Sponsership போன்ற non-Express Entry விண்ணப்பங்களை PR விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு IRCC வழிகாட்டுதல் வழங்கும்.

கடந்த 5 ஆண்டுகளில் IME முடித்திருந்தாள் அதன் Unique medical identifier number-ஐ புதிய விண்ணப்பத்தில் சேர்க்கலாம்.

இந்த புதிய மாற்றம் PR விண்ணப்ப செயமுறையை வேகமாகவும் மருத்துவ தரத்தை உறுதிப்படுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# காட்டுத் தீயை, புகையையும் கட்டுப்படுத்த கனடா போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை

## அமெரிக்கா புதிய குற்றச்சாட்டு



கனடாவின் மீது அமெரிக்க குடியரசுக் கட்சி அரசியல்வாதிகள் புதிய குற்றச்சாட்டு ஒன்றை சுமத்தியுள்ளனர்.

கனடாவில் காட்டுத் தீகளையும் புகையையும் கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

அமெரிக்க குடியரசுக் கட்சி அரசியல்வாதிகள் கடுமையான வார்த்தைகளால் இது தொடர்பில் அறிக்கைகள் மற்றும் கடிதங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கோடையில் பல மாநிலங்களில் காற்றை மாசு படுத்திய புகை, காரணமாக

02





# ராஜ குடும்ப உறுப்பினர் கனடாவுக்கு வருகின்றார்

கனடாவுக்கு ராஜ குடும்பத்தின் அடுத்த உத்தியோகபூர்வ விஜயம் குறித்த அதிகாரப் பூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மே மாதம், பிரித்தானிய மன்னர் சார்லசும் ராணி கமீலாவும் கனடாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்கள்.

ட்ரம்ப் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக மிரட்டிக்கொண்டிருந்த நேரத்தில், கனடா பிரித்தானிய மன்னரின் கட்டுப்பாட்டிலுள்ள நாடு என்பதை ட்ரம்புக்கு உணர்த்தும் வகையில், சரியான நேரத்தில் கனடாவுக்கு பயணித்தார் மன்னர் சார்ளஸ்.

இந்நிலையில், அடுத்த மாதம், மற்றொரு ராஜ குடும்ப உறுப்பினர் கனடாவுக்கு உத்தி யோகபூர்வ விஜயம் மேற்கொள்ள இருக்கி றார்.

எடின்பர்க் கோமகளான இளவரசி சோபி, செப்டம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை கனடாவில் அரசுமுறைப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

இளவரசி சோபி, மன்னர் சார்ளஸின் தம்பியான இளவரசர் எட்வர்டின் மனைவி ஆவார்.

இளவரசி சோபி, கனடாவின் ஆல்பர்ட் டாவில் நடைபெற இருக்கும் Spruce Meadows Masters tournament என்னும் விளையாட்டுப் போட்டிகளின் 50 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிகளுக்காக அங்கு செல்கிறார்.

இளவரசி சோபிக்கு சமீபத்தில் Spruce Meadows Masters tournament அமைப்பின் பொறுப் பாளர் என்னும் புதிய பொறுப்பு வழங்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## காட்டுத் தீகளையும்...


( C01 தொடர்ச்சி)

இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மிச்சிகனின் அழகிய ஏரிகள் மற்றும் முகாம் மைதானங்களில் குடும்ப விடு முறைகளை அனுபவிப்பதற்கு பதிலாக, மூன்றாவது கோடையாக, கனடாவின் காட்டுத் தீகளைத் தடுக்க மற்றும் கட்டுப்படுத்தத் தவறியதால், மிச்சிகன் வாசிகள் ஆபத்தான காற்றை சுவாசிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மிச்சிகன், அயோவா, நியூயார்க், வடக்கு டகோட்டா, மினசோட்டா மற் றும் விஸ்கான்சின் குடியரசுக் கட்சி யினரிடமிருந்தும் இந்தக் குற்றச்சாட்டுக் கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த புகை இரு நாடுகளுக்கு இடை யேயான உறவுகளை பாதிக்கிறது என்றும், அமெரிக்கா இதை வரி பேச்சு வார்த்தைகளில் ஒரு பிரச்சினையாக எழுப்பலாம் என்றும் அவர்கள் எச்ச ரித்துள்ளனர். ஆனால், பருவநிலை மாற் றத்தின் பங்கை அவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை என்று பருவநிலை விஞ்ஞா னிகள் குறிப்பிடுகின்றனர்.




# டொராண்டோவில் கத்தி குத்து தாக்குதல்

டொராண்டோ நகர மையத்தில் இடம்பெற்ற வெட்டு சம்பவத்தில் 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

டொராண்டோ பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர். ரிச்மண்ட் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் பாதர்ஸ்ட் ஸ்ட்ரீட் பகுதியில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

50 களில் உள்ள ஒரு ஆண் பலத்த காயங்களுடன் கண்டறியப்பட்டு, பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என டொராண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்தில் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் சிறு காயங்களுடன், ஆனால் உயிருக்கு ஆபத்து இல்லாத நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கான பின்னணி குறித்த தகவல்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை.



# கனடாவில் இந்த ஆண்டில் பாரிய சைபர் தாக்குதல்கள்

கனடாவில் இந்த ஆண்டில் இது வரையில் சுமார் 12 பில்லியன் சைபர் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

பர்னபியில் உள்ள ஃபோர்டினெட்டின் பல்கலைக்கழகத்தில், இணைய பாதுகாப்பு ஆய்வாளர்கள் தினமும் தீங்கு விளைவிக்கும் ஒன்லைன் செயல்பாடுகளைக் கண்காணித்து வருகின்றனர்.

குற்றவாளிகள் இப்போது வேகமாகவும், அதிநவீனமாகவும் செயல்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கனடாவை இலக்காகக் கொண்டு சுமார் 12 பில்லியன் இணையத் தாக்குதல்களை ஃபோர்டினெட் பதிவு செய்ததாக நிறுவனத்தின் தலைமை பாதுகாப்பு உத்தியாளர் டெரெக் மான்கி தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஒவ்வொரு நாளும் இருண்ட வலையில் (டார்க் வெப்) உள்ளோம், அச்சுறுத்தல்களைத் தேடுகிறோம், அந்த பாதுகாப்புகளை உருவாக்குகிறோம் என மான்கி தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் புதிய தொழில்நுட்பங்களின் ஊடாக சைபர் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும், பல்வேறு துறைகளில் சைபர் தாக்குதல்கள் பல்வேறு வடிவங்களில் இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது செயற்கை நுண்ணறிவின் உதவியையும் பயன்படுத்தி இவ்வாறான சைபர் தாக்குதல்களை முறியடிக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.